# தமிழ்நாடு தொடக்கக்கல்வி ஆசிரியர் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு (டிட்டோஜாக்)

03.02.2024

டிட்டோஜேக் பேரமைப்பின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டம் 03.02.2024 அன்று காலை 11 மணியளவில் சென்னை மேயர் சிட்டி பாபு வீதியில் அமைந்துள்ள தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் பொதுச்செயலாளர் மன்றம் திரு. நா. சண்முகநாதன் அவர்கள் தலைமையேற்றார். டிட்டோஜேக் பேரமைப்பில் இணைந்துள்ள அனைத்து சங்கங்களின் மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும் கருத்துக்களைத் தெரிவித்தனர். அனைவரின் ஒருமித்த கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம்: 1**

அரசாணை எண்: 243 பள்ளிக்கல்வித்துறை நாள்: 21.12.2023 ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு கடும் பாதிப்பினை ஏற்படுத்தும் நிலையில் அந்த அரசாணையினை வரவேற்று ஒருசில சங்கங்கள் 04.02.2024 அன்று நடத்துவதாக அறிவித்துள்ள நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு. பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும், பள்ளிக்கல்வித்துறை உயர் அலுவலர்களும் பங்கேற்பதை முற்றிலும் தவிர்த்திட வேண்டும் எனவும், தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றும் ஒரு லட்சத்திற்க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுடைய மன உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் டிட்டோஜேக் மாநிலப் பொதுக்குழு மாண்புமிகு.பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களையும், கல்வித்துறை உயர் அலுவலர்களையும் பெரிதும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. ஆசிரியர்களுக்கு விரோதமான அரசாணையினை 243 பள்ளிக்கல்வித்துறை நாள்: 21.12.2023 வரவேற்று நன்றியறிவிப்பு மாநாட்டினை நடத்தும் பட்சத்தில் அதனைக் கண்டித்து தமிழகம் முழுவதும் நாளை ஞாயிற்றுக்கிழமை 04.02.2024 காலை 11 மணியளவில் மாவட்டத் தலைநகரங்களில் கருப்புப்பட்டை அணிந்து ஆர்ப்பாட்டம்

நடத்துவது எனவும் மாநில, மாவட்ட, வட்டாரப் பொறுப்பாளர்கள், ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்: 2**

இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடு களைந்து மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 01.01.2006 முதல் வழங்குதல், 12.10.2023 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் டிட்டோஜேக் பேரமைப்புடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொண்ட 12 அம்ச நிதி சாராத கோரிக்கைகள் மீது உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டுதல், 60 ஆண்டு கால தொடக்கக்கல்வி ஆசிரியர்களின் ஒன்றிய முன்னுரிமை என்ற கட்டமைப்பை எவ்வித ஆலோசனையும், கருத்துக் கேட்பும் இன்றி மாநில முன்னுரிமையாக மாற்றி. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களை, குறிப்பாக பெண் ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்பினையும் , இடைநிலை ஆசிரியர்கள், துவக்கப்பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பதவி உயர்வு வாய்ப்பினையும் மிகக் கடுமையாக பாதித்து, மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் பள்ளிக் கல்வித் துறை அரசாணை எண்:243 நாள் 21.12.2023ஐ ரத்து செய்ய வலியுறுத்தியும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறும் நாளான 19.02.2024 அன்று சென்னையில் டிட்டோஜாக் மாநில உயர்மட்டக் குழு உறுப்பினர்கள், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, வட்டாரப் பொறுப்பாளர்கள், ஆசிரியர் பெருமக்கள் அனைவரும் பங்கேற்கும் மாபெரும் உண்ணாவிரத உரிமை மீட்புப் போராட்டத்தை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

**தீர்மானம்: 3**

தொடக்கக் கல்வித் துறையில் பணியாற்றும் 90 சதவீத ஆசிரியர்களை பாதிக்கக்கூடிய அரசாணை: 243 பள்ளிக்கல்வித்துறை நாள்: 21.12.2023ஐ உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை ஜாக்டோ ஜியோ உள்ளிட்ட கூட்டமைப்புகள் பிரதான கோரிக்கையாக ஏற்றுக் கொண்டு போராடுவது என்று முடிவெடுத்து அறிவித்துள்ள நிலையில் சிபிஎஸ் ரத்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை வென்றெடுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலுப்படுத்த வேண்டும்

என்ற அடிப்படையில் 19.02.2024 முதல் டிட்டோஜேக் சார்பில் நடத்துவதாக அறிவித்திருந்த மாவட்டத் தலைநகர் மறியல் போராட்டத்தை ரத்து செய்வது எனவும், ஜாக்டோ ஜியோ பேரமைப்பு உள்ளிட்ட கூட்டமைப்புகள் அறிவித்துள்ள 15.02.2024 ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம், 26.02.2024 முதல் நடைபெறும் கால வரையற்ற வேலை நிறுத்தம் ஆகிய போராட்டங்களில் தொடக்கக்கல்வித்துறையில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஆசிரியர்கள் பங்கேற்று வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இப்படிக்கு

(ந.ரங்கராஜன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(செ.முத்துச்சாமி EX.MLC)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

(அ.வின்செண்ட் பால்ராஜ்)
பொதுச்செயலாளர்
தமிழக ஆசிரியர் கூட்டணி

(ச.மயில்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(இரா.தாஸ்)
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(சி.சேகர்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்

(இல.தியோடர் ராபின்சன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

(நா.சண்முகநாதன்)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

(வி.எஸ்.முத்துராமசாமி)
பொதுச்செயலாளர்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(கோ.காமராஜ்)
பொதுச்செயலாளர்
தமிழக தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(சி.ஜெகநாதன்)
பொதுச்செயலாளர்
JSR தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

(டி.ஆர்.ஜான் வெஸ்லி)
பொதுச்செயலாளர்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கம்